பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
15 09 2025 MONDAY 12.40 PM
ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1) வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை எட்ட பொறியாளர்கள் அயராது பாடுபட வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.
2) வக்ஃப் திருத்தச்சட்டத்தில் சில பிரிவுகளின் பயன்பாட்டை உச்சநீதிமன்றம் நிறுத்திவைத்துள்ளது.
3) யுபிஐ மூலம் ஒருநாளில் 10 லட்சம் ரூபாய் வரை குறிப்பிட்ட பொருட்கள் வாங்குவதற்கு இன்று முதல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
4) அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் இந்தியர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவத்தை அதிபர் திரு டொனல்டு ட்ரம்ப் வன்மையாக கண்டித்துள்ளார்.
5) மலேசியாவில் நடைபெற்றுவரும் 16 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கூடைப்பந்து போட்டியில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

- இனி விரிவான செய்திகள் –

<<<<<<>>>>>>

பொறியாளர் தினம் இன்று நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது.

நாட்டின் தலைசிறந்த பொறியாளராக திகழ்ந்த விஸ்வேஸ்வரய்யாவின் பிறந்த நாளான செப்டம்பர் 15-ஆம் தேதி பொறியாளர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்நாளையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா ஆகியோர் பொறியாளர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பிரதமர் திரு நரேந்திர மோடி சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், பொறியாளர்களின் வளர்ச்சிக்காக பாடுபட்ட பாரத ரத்னா விஸ்வேஸ்வரய்யாவை நினைவு கூர்ந்துள்ளார்.

அவரது அரும்பணியால் நாட்டின் பொறியியல் கட்டமைப்பு விரிவடைந்துள்ளதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை எட்டுவதற்கு பொறியாளர்கள் தங்களின் ஒட்டுமொத்த அர்ப்பணிப்பையும் தர வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

பொறியாளர்கள் தங்களது ஆக்கத்திறனையும், உறுதிபாட்டையும், புதுமை கண்டுபிடிப்புகளுக்கான முயற்சிகளையும் அயராது மேற்கொள்ள வேண்டும் என்று பிரதமர் கேட்டுக்கொண்டுள்ளார்.

உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வெளியிட்டுள்ள பதிவில், சரித்திர சாதனை படைத்த பொறியாளர் விஸ்வேஸ்வரய்யாவின் அரும்பணியினால் நாடு வளர்ச்சிப் பாதைக்கு திரும்பியதாக கூறியுள்ளார்.

அனைத்துப் பொறியாளர்களும் தொலைநோக்கு பார்வையுடனும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் புதிய தொழில்நுட்பங்களை கொண்டுவர வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் விடுத்துள்ள செய்தியில், சுயசார்புமிக்க வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க பொறியாளர்கள் புதுமை கண்டுபிடிப்புகளை கொண்டுவர வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

பொறியாளர் சர் விஸ்வேஸ்வரய்யாவின் பங்களிப்பு மகத்தானது என்றும் அவர் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

*வக்ஃப் திருத்தச்சட்டத்தில் சில பிரிவுகளின் பயன்பாட்டை உச்சநீதிமன்றம் நிறுத்தி வைத்துள்ளது.*

*தலைமை நீதிபதி திரு கவாய், நீதிபதி Masih ஆகியோர் கொண்ட பெஞ்ச், அரசால் நியமிக்கப்படும் வக்ஃப் சொத்துக்களுக்கான பொறுப்பு அதிகாரியின் செயல்பாட்டில் சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.*

*<<<<<<>>>>>>*

*யுபிஐ மூலம் ஒருநாளில் 10 லட்சம் ரூபாய் வரை குறிப்பிட்ட பொருட்கள் வாங்குவதற்கு இன்று முதல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.*

*தேசிய பணப்பரிவர்த்தனை கழகம் கடந்த மாதம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், ஒரு தனிநபரிடமிருந்து பொருட்கள் வாங்குவதற்கான உச்சவரம்பை பத்து லட்சம் ரூபாயாக உயர்த்தி அனுமதி வழங்கியிருந்தது.*

*பயன்பாட்டாளர்கள் அதிக தொகையை யுபிஐ பரிவர்த்தனை திட்டத்தின்கீழ், அனுப்புவதை ஊக்குவிக்கும் நோக்கில், இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*பொருட்கள் வாங்குவதற்கு மட்டும் பத்து லட்சம் ரூபாய் அனுமதிக்கப்படுவதாகவும், ஒரு நபரிடமிருந்து மற்றொரு நபருக்கு அனுப்பப்படும் தொகையின் உச்சவரம்பு ஒரு லட்சம் ரூபாயாக தொடர்ந்து நீடிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*<<<<<<>>>>>>*

*ஜார்கண்ட் மாநிலத்தில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட தீவிர தேடுதல் நடவடிக்கையில் மூன்று நக்சலைட்டுகள் கொல்லப்பட்டனர்.*

*அம்மாநிலத்தில் ஹசாரிபாக் மாவட்டத்தில் உள்ள கராண்டி கிராமத்தில், பாதுகாப்புப்படையினர் இன்று காலை தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, இந்த*

தீவிரவாதிகள் பாதுகாப்புப்படையினரை தாக்க முற்பட்டதாகவும், அப்போது நடத்தப்பட்ட பதில் தாக்குதலில் இந்த மூன்று தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் பாதுகாப்புப்படையினர் தெரிவித்தனர்.

இவர்கள் மூவரும் தீவிரமாக தேடப்பட்டு வந்த நக்சலைட்டுகள் என்றும், அவர்களிடமிருந்து ஏகே-47 ரக துப்பாக்கிகளும், வெடிப்பொருட்களும் கைப்பற்றப்பட்டதாக பாதுகாப்புப்படையினர் தெரிவித்தனர்.

மத்திய ரிசர்வ் படையினரும், உள்ளூர் காவல்துறையினரும் இணைந்து இந்த தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

<<<<<<>>>>>>

இனி மக்களின் மனதை வென்ற மத்திய அரசின் திட்டங்கள்.

(சவுண்ட் பைட் (1) Intro Tune - 6 வினாடிகள்)

சேவை, நல்லாட்சி என்பதை தாரக மந்திரமாக கொண்டு ஓய்வின்றி பணியாற்றி வரும் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, சிறந்த நிர்வாகத்தின் மூலம் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்த சிறப்பு தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது நவாமி கங்கை திட்டம்.

கங்கை நதி இந்தியாவின் உயிர்நாடி. இந்த நதி புனிதமானது,

அழியாதது மற்றும் இந்தியப் பொருளாதாரத்தின் ஒரு முக்கிய இரத்த நாளமாகிறது. கங்கையின் தூய்மையை மீட்டெடுப்பதற்கான ஒரு லட்சிய மற்றும் முழுமையான முயற்சியாக நரேந்திர மோடி அரசாங்கத்தால் 2014 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொடங்கப்பட்ட நமாமி கங்கை திட்டம். கங்கையின் தூய்மை என்பது ஒரு கூட்டுப் பொறுப்பு என்று பிரதமர் மோடி வலியுறுத்தியுள்ளார்...

*நமாமி கங்கை என்பது மாசு குறைப்பு, சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு, திறன் மேம்பாடு மற்றும் சமூக ஈடுபாடு ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் ஓர் பன்முகஅணுகுமுறையாகும். இது நதியின் சுற்றுச்சூழல் ஒருமைப்பாடு மற்றும் அதை நம்பியிருக்கும் லட்சக் கணக்கான மக்களின் வாழ்வாதாரம் ஆகிய இரண்டிலும் கவனம் செலுத்துகிறது.*

*இந்த திட்டம் மாசு குறைப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை கண்டுள்ளது. கழிவுநீர் சுத்திகரிப்பு திறன் 2014 ஆம் ஆண்டுக்கு முந்தைய நிலையில் இருந்து 30 மடங்குக்கு மேல் தாண்டியுள்ளது. கங்கையில் வாழும் டால்பின் மீன்களின் எண்ணிக்கை அதிகரிப்பால் நதிச் சுற்றுச்சூழல் அமைப்பில் ஏற்பட்ட முன்னேற்றம் உறுதிப்படுத்தப்படுகிறது. உண்மையில், கங்கை நதியில் இதற்கு முன்னர் காணப்படாத பகுதிகளிலிருந்து இப்போது டால்பின் மீன்கள் தென்படுவதாக தெரியவந்துள்ளது.*

*ஒரு காலத்தில் சாத்தியமற்ற கனவாகக் கருதப்பட்டவை நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் ஒரு தேசிய இயக்கமாக மாற்றப்பட்டுள்ளன. நீண்டகாலமாக புறக்கணிக்கப்பட்டுவந்ததால் பெரும் சுமையாக கருதப்பட்ட புனித கங்கை, தற்போது புதிய நம்பிக்கையுடன் பாய்ந்தோடுகிறது. கடுமையான நடவடிக்கைகளால் லட்சியங்கள் ஈடேற்றப்படும்போது நம்பிக்கை புதுப்புனல் பொங்குகிறது.*

*(சவுண்ட் பைட் (1) Clsoing Tune - 7 வினாடிகள்)*

*<<<<<<>>>>>>*

*சரக்கு மற்றும் சேவை வரி கட்டமைப்பில் அண்மையில் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தங்கள் அனைத்துத்தரப்பு மக்களிடமும் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.*

*தமிழகத்தின் வேலூர் மாவட்டத்தை சேர்ந்த பெண்மணி ஒருவர் நடுத்தர மக்களுக்கு பயனுள்ள வகையில் ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் அமைந்துள்ளதாக கூறினார்.*

*<<<<<<>>>>>>*

*அமெரிக்காவில் உள்ள டெக்சாஸ் மாகாணத்தில் வசித்து வந்த இந்தியர் ஒருவர் கொடூரமாக கொல்லப்பட்ட சம்பவத்தை அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் வன்மையாக கண்டித்துள்ளார்.*

*ஆவணமின்றி தங்கியிருந்த கியூபா நாட்டை சேர்ந்த மார்டின்ஸ் இந்த கொலையை செய்துள்ளார் என்றும், அந்த குற்றவாளியை சட்டப்பூர்வமாக தண்டிக்க அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.*

*ஜோபைடன் அதிபராக இருந்தபோது, இந்த கொலை குற்றவாளி விடுவிக்கப்பட்டதையும் திரு ட்ரம்ப் சுட்டிக்காட்டியுள்ளார்.*

*<<<<<<>>>>>>*

*மலேசியாவில் நடைபெற்றுவரும் 16 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கூடைப்பந்து போட்டியில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*இப்போட்டியின் B பிரிவின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியா 71-க்கு, 54 என்ற புள்ளிக்கணக்கில் Samoa-வை வென்றது.*

*-----*

*சீனாவில் நடைபெற்றுவரும் உலக Speed ஸ்கேட்டிங் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அனந்த்குமார் வேல்குமார், கிரிஷ் சர்மா ஆகியோர் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.*

*<<<<<<>>>>>>*